**செ.வெ.எண்: 450** **நாள்: 31.08.2019**

**திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை மாவட்ட தொழில்மையத்தில் வைத்து தொழில் முனைவோர் விழிப்புணர்வு கருத்தரங்கு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

-----------------------------------------

தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக மாற்றிட, புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கும் நோக்கோடு தொழில்முனைவோர் விழிப்புணர்வு கருத்தரங்கு (MSME – OUTREACH PROGRAMME) மாவட்ட ஆட்சியர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஸ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட தொழில் மையத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த தொழில் முனைவோர்கள், கங்கைகொண்டான் மற்றும் வள்ளியூர் தொழிற்பேட்டைகளில் தொழில் துவங்கி, தொழில் வளம் பெருக்கிட முன்வருமாறு கேட்டுக் கொள்வதுடன், ரூ.200 கோடி முதலீட்டில் உணவு பதப்படுத்தும் பூங்கா திருநெல்வேலி மாட்டத்தில் விரைவில் துவங்கப்படும். ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை மாற்றப்படுகின்ற தொழில் கொள்கையின் புதுமைகளை அனைத்து தொழில் முனைவோர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியதுடன், தமிழகத்தின் தனித்தொழில் கொள்கையான 2017, நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிவித்தார். விவசாயம் சார்ந்த மாவட்டமாக இருந்தும், மாவட்ட தொழில் மையம் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் நீட்ஸ் மற்றும் யூ.ஒய்.இ.ஜி.பி. திட்டம் செயல்படுத்துவதில் மாநிலத்தில் இரண்டாவது இடத்தில் இருப்பதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெருமையுடன் தெரிவித்துக் கொண்டார்.

மாவட்ட தொழில் மையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் யு.ஒய்.இ.ஜி.பி. கடன் திட்ட இலக்காக 175 நபர்களுக்கு 105 இலட்சம் மானிய ஒதுக்கீட்டில் 40 நபர்களுக்கு 26.25 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. பி.எம்.இ.ஜி.பி. திட்ட இலக்காக 43 நபர்களுக்கு 129.00 இலட்சம் மானியம் நிர்ணயிக்கப்பட்டு 29 நபர்ளுக்கு 21.75 இலட்சம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நீட்ஸ் திட்ட இலக்காக 34 நபர்களுக்கு 333.00 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 11 நபர்களுக்கு 184.95 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதிகப்படியான மானியத்தொகை உள்ளதால், விருப்பமுள்ள அனைவரும் மாவட்ட தொழில் மையம் மூலம் உரிய இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்வதுடன், தொழில் துவங்குவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்த்து, உரிமங்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள இணையதளம் மூலம் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தொழில்முனைவோர்கள் தனது உரிமங்களை உடனுக்குடன் காலவிரயமின்றி பெற்றிட http://www.easybusiness.tn.gov.in/msme என்ற இணையதள சேவையை பயன்படுத்திடுமாறும், முதலீட்டு மானியம், மின்மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பிற்கான மானியம் மற்றும் சர்வதேச தரச்சான்றிதழ் பெற செலவீன மானியங்களையும் மாவட்ட தொழில் மைய இணையதளம் மூலம் விண்ணப்பித்து பயனடையுமாறு கேட்டுக் கொண்டார். இக்கூட்டத்தின் வாயிலாக யு.ஒய்.இ.ஜி.பி., பி.எம்.இ.ஜி.பி மற்றும் நீட்ஸ் திட்டங்கள் வாயிலாக **33** நபர்களுக்கு **307.94 இலட்சம்** திட்ட முதலீட்டில் கடன் பட்டுவாடா ஆணைகள் வழங்கப்பட்டது. நமது மாவட்டத்தில் முன்னோடி வங்கியும், ஏனைய வங்கிகளும் சிறப்பாக தொழில்முனைவோர்களுக்கு கடன் வழங்கி வருவதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் பாராட்டினார்கள்.

கூட்டத்தில் திரு.உ.முருகேஷ், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி அவர்கள் திட்ட விளக்கவுரை ஆற்றினார். திரு.இராமநாதன், முதன்மை மண்டல மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருநெல்வேலி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். திரு.A.வெற்றிவேல், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்னோடி வங்கி மேலாளர் அவர்கள், கிளை மேலாளர், சிட்கோ அவர்கள், திருமதி.K.செல்வராணி, இந்தியன் வங்கி ஒருங்கிணைப்பாளர் அவர்கள், திரு.M.கோவிந்தராஜ், உதவி இயக்குநர், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அவர்கள், திரு.N.கனகசெல்வன், கிளை மேலாளர், இந்தியன் வங்கி திருநெல்வேலி டவுண் அவர்கள், திரு.S.விஜயபாஸ்கர், கிளை மேலாளர், இந்தியன் வங்கி, ஆலங்குளம் அவர்கள் முதன்மை மேலாளர், கனரா வங்கி, பாளையங்கோட்டை அவர்கள், இயக்குநர் திரு.ஆர்.சியாமளாநாதன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, RSETI,திரு.கிருஷ்ணன், முன்னோடி வங்கி அலுவலர் அவர்களும் மற்றும் தொழில் முனைவோர்களும் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தினர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி**